தலைப்பு 201 - பௌத்த அலுவல்கள் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 201 - பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை பௌத்த அலுவல்கள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை

பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 டிசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக

காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களைக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i)	நிதிச் செயலாற்றல் கூற்றில் மூலதனச் சொத்துக்களைக் கைப்பற்றல் செலவினம் ரூபா 11,044,341 மற்றும் நிதி நிலமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஆண்டுக்குரிய கூட்டுப் பெறுமதியான ரூபா 12,010,954 ஆனதன் காரணமாக ரூபா 966,613 வேறுபாடு காணப்பட்டது.	வேறுபாட்டுக்கான காரணமாக 201-1-1-0-2102 மற்றும் 2103 இன் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மூலதனச் சொத்துக்களுக்கு மேலதிகமாக சாசனாரக்செப பள மண்டய இற்காக வசதிகள் வழங்குவதற்குரிய செலவின விடயமான 201-2-2-9-2205 இன் கீழும் மூலதன சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டமையும் அந்த கொள்வனவுகளுக்கு உரிய உறுதிச்சீட்டுக்கள் சிகாஸ் இல் உள்ளடக்கும் போது இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் காணப்படுகின்ற தொழில் நுட்ப நிலைமையின் கீழ் மூலதன சொத்துக்கள் செய்தலாக உள்ளடக்குவதற்கு இடமளிக்கப்படாமையினால் நிதிச் செயலாற்றல் கூற்றில் மூலதனச்	நிதிச் சொத்துக்கள் சரியாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

		சொத்துக்கள் கைப்பற்றல் செலவினத்தின் கீழ் உள்ளடக்கப்படாமையால் அதாவது சொத்து கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அந்த நிதி நிலமை தொடர்பான கூற்றில் ஆண்டுக்கு உரிய சேர்க்கப்பட்ட பெறுமதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தமையும் 2024 ஆம் ஆண்டின் போது அகற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கூற்றில் குறைத்துக் காண்பிக்கப்பட்டமையும் காண்பிக்கப்பட்டுள்ளது.	
(ii)	மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் பதவியணியினருக்காக ஏனைய நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த கொள்வனவுகளில் கூட்டுத்தொகையான ரூபா 261,121 ஏசீஏ 6 படிவத்தில் ஆண்டின் கொள்வனவாக குறிப்பிடுவதற்குப் பதிலாக ஆரம்ப மீதியில் சீராக்கமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.	ஏனைய நிறுவனத்திற்கு திணைக்களத்தின் நிதியேற்பாடு ஒதுக்குவதன் மூலம் அந்த நிறுவனத்தால் சொத்துக்கள் கொள்வனவு செய்யும் அந்த கொடுப்பனவுகள் மூலதனச் சொத்து கைப்பற்றல் ஆக உள்ளடக்குவதற்கு சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் முடியாது இருந்தமையும் திணைக்களத்தின் மூலம் கொள்வனவு செய்யப்படாமையினால் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளை உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தமையாலும் இந்த சந்தர்ப்பத்தில் திணைக்களத்திற்கும் கிடைக்காது இருந்தமையாலும் எனினும் அப் பெறுமதி சொத்துக்களின் கீழ் காண்பிக்க வேண்டியிருந்தமையாலும் ஆரம்ப மீதியில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் குறிப்பிடுதல் தொடர்பாக அரசாங்கக் கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிச் சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

(ஆ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லப்படாமை

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணிச் செல்லப்படாது இருந்தமை தெரிவுப் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i) இழப்பு மற்றும் நட்ட பதிவேடு		
நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புத் தொடர்பாக பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை.	முறையான பிரகாரம் நாளது வரையாகப் பேணிச் செல்வதற்கு உரிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழ் வருகின்ற படிவத்தின் பிரகாரம் இழப்புத் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(ii) கடன் மற்றும் முற்பணப் பதிவேடு		
2017 யூலை 05 ஆம் திகதிய இலக்கம் 256/2017 என்ற அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கடன் மற்றும் முற்பணப் பதிவேடு நாளது வரையாகப் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.	நாளது வரையாக பேணிச் செல்வதற்கு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	2017 யூலை 05 ஆம் திகதிய இலக்கம் 256/2017 என்ற அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் சீ.சீ 10 படிவம் மற்றும் அந்த மாதிரியை அடிப்படையாகக் கொண்டு கடன் மற்றும் முற்பணப் பதிவேடு தயாரிக்கப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீண்டெழும் செலவின விடயங்கள் மூன்றிற்காக (03) நிதியேற்பாடு செய்யப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 33,000,000 இற்காக ஆண்டில் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 24,292,000 கூட்டுத் தொகையான நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்த போதும் அதில் ரூபா 20,869,041 நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றுதல்களின் சதவீதமாக 31 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.	காணப்படுகின்ற தேவையின் பிரகாரம் உரிய செலவின விடயங்களுக்காக நிதியேற்பாடு மாற்றப்பட்ட பின்னரும் ஏற்படுகின்ற விசேட நிலையின் கீழ் உரிய செலவினங்களைச் செய்வதற்கு ஏற்படாது இருந்தமையும் விசேடமான ஏற்பட்டிருந்த சீரற்ற காலநிலை மற்றும் க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர்தர பரீட்சைகள் தினங்கள் மாற்றுவதற்கு முடியாது இருந்ததன் அடிப்படையில் சமஸ்த லங்கா மாணவர் திறன் நிகழ்ச்சித் திட்டத்தை முடியாது இருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் இயலுமான வரை பொருத்தமான மற்றும் சரியான மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	13 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக நிதியேற்பாடு செய்யப்பட்ட ரூபா 348,358,000 கூட்டுத் தொகையான தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 143,197,161 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக 32 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.	மேற்கூறப்பட்ட (அ) இன் குறிப்பிடப்பட்ட நிலைமை போன்று அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு படிகளை செலுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் அந்த படிகளை செலுத்துகின்ற சந்தர்ப்பம் வரையில் முழுமையான தகைமைகள் பெற்ற ஆசிரியர்கள் சேவையில் இருக்காமையினால் அந்தப் படிகள் செலுத்தாமையின் காரணமாக அந்த செலவின விடயத்தின் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.	மேற்படி
(இ)	ஒரு மூலதன செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 21,000,000 ஆன தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 14,988,702 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக 71 சதவீதம் ஆகும்.	மகாநாயக்க சாரிக்காராமய க்கு உரிய மின் பாரந்தூக்கி பொருத்துவதற்கும், மின் பிறப்பாக்கி இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காகவும் இந்த நிதியேற்பாட்டை பயன்படுத்துவதன் மூலம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும்	மதிப்பீடு செய்வதற்கு முன் தேவையினை சரியாக இனங்காணல் வேண்டும்.

உரிய மதிப்பீட்டுப் பெறுமதியின் பிரகாரம் பிரகாரம் அந்த நிதியேற்பாட்டுக்கு உரிய பணிகளுக்காக போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் மேலதிக நிதியேற்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு தேவையாக இருந்தமையும் அந்த தேவையினை பூர்த்தி செய்தல் அத்தியாவசிமா என மீண்டும் கவனத்தில் கொண்டு தீர்மானம் எடுக்கப்பட்டமையால் இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு சேமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

3.2 வைப்பு மீதிகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 731,571 கூட்டுத்தொகையான இரண்டு வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமானம் 571(2) மற்றும் (3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.	உரிய கால எல்லையை விஞ்சிக் காணப்படுகின்ற வைப்புக்கள் தொடர்பாக அவற்றுக்கு உரிய பணிகளுக்காக உடனடியாக ஈடுபடுத்துவதற்கோ அல்லது நிதிப்பிரமாணம் 571(2) மற்றும் (3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஆ)	2024 ஆம் ஆண்டில் வெசாக் விழாவிற்காக நன்கொடையாளர் நான்கு பேர்களினால் வழங்கப்பட்ட நன்கொடை பணத்திற்கு உரிய பணிகளுக்கு ஈடுபடுத்தாமல் எஞ்சியிருந்த ரூபா 778,000 கூட்டுத்தொகையான தொகை பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.	இந்த வைப்பு வைப்புச் செய்யப்பட்ட திகதியில் இருந்து இரண்டு வருடங்கள் நிறுத்தி வைக்க முடியுமாக இருந்த போதிலும் உரிய பணிகளுக்காக கூடிய விரைவில் இந்த பணத்தை ஈடுபடுத்தி தீர்த்து வைக்குமாறு உரிய பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	வைப்புக்களுக்கு உரிய பணிகளுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மகாநாயக்க சாரிக்காராமய மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடான ரூபா 21 மில்லியனில் 06 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டதுடன் இலக்கிடப்பட்ட பௌதீக செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மகாநாயக்க சாரிக்காராமய மறுசீரமைப்பதற்கு உரிய மின்சார பாரந்தூக்கியை பொருத்துதல் மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக நிதியேற்பாடு பயன்படுத்துவதன் மூலம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உரிய திணைக்களத்தில் பெறுமதியின் பிரகாரம் அந்த நிதியேற்பாடு உரிய பணிகளுக்காக போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் மேலதிக நிதியேற்பாடை ஒதுக்கிக்க கொள்வதற்கு தேவை ஏற்பட்டிருந்தமையால் அந்த தேவையை பூர்த்தி செய்தல் அத்தியாவசியமா? என மீண்டும் கவனத்தில் கொண்டு தீர்மானம் எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	திட்டமிடும் போது உரிய சகல விடயங்களையும் கவனத்தில் கொண்டு போதியளவான கவனம் செலுத்தி திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பௌத்த மறுமலர்ச்சி ஏற்படுத்தும் வகையில் அனுபுது மிகிந்து தேரர் கொண்டாடும் விழாவை நடாத்துதல் மற்றும் அதற்கு இணையாக நாடு முழுவதும் விசேட நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்கமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய எந்த செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அனுபுது மிகிந்து தேரரை கொண்டாடுவதற்காக உரிய நிதியேற்பாடு அநுராதபுரம் மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மிகிந்தலையில் ரஜமகா விகாராதிபதி தேரர் அவர்கள் அந்த அனுசரணையை நிராகரித்து இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.	செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ள பணிகளை திட்டமிடப்பட்ட பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும்.
(இ)	பௌத்த சாகித்திய கலைஞர்களைப் பாதுகாத்தல், போசித்தல் மற்றும் மேம்படுத்துதல் திணைக்களத்தின் நோக்கமாக இருந்த போதிலும் அதற்காக 2024 இன் வருடாந்த வரவு செலவுத்	அரசாங்கத்தின் நிதியேற்பாடு வரையறுக்கப்பட்டதன் காரணமாக அத்தியாவசிய செலவின விடயங்களுக்காக மாத்திரம் நிதி	திணைக்களத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் உரிய திட்டங்களைத் தயாரித்து அதன்

திட்ட மதிப்பீட்டில் நிதியேற்பாடு ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	ஒதுக்குவதற்கு வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் 2026 ஆம் ஆண்டின் போதும் கடந்த ஆண்டுகளில் நிதி ஒதுக்கப்பட்ட விடயங்கள் தவிர நிதி ஒதுக்குதல் மேற்கொள்ளப்படாது இருந்ததாகவும் அறிவிக்கப்பட்டள்ளது.	பிரகாரம் நிதியேற்பாடு ஒதுக்குதல் வேண்டும்.

4.2 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மீளாய்வாண்டில் 2025 ஆம் ஆண்டுக்கு உரிய அறநெறிப் பாடசாலை பாடப் புத்தகங்கள் அச்சிடுவதற்காக ரூபா 250 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 170 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. பாடநெறிப் புத்தகங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்ற மாவட்டங்களின் எண்ணிக்கை 22 ஆக இருந்த போதிலும் 2024 இன் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியின் போது 09 மாவட்டங்களுக்கு உரிய அறநெறிப் பாடசாலைகள் 4,882 இற்கு மாத்திரமே அந்த பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டுக்காக அரசாங்கத்தின் அச்சகத்தில் இருந்து பாடப் புத்தகங்களின் தேவையின் பிரகாரம் 1,922,000 அச்சிடப் பட்டிருந்தமையும் 2024 ஆம் ஆண்டில் 6-10 ஆம் வகுப்பு பரீட்சை 2025 ஆம் ஆண்டின் சனவரி 26 ஆந் திகதி நடாத்தப்பட்டதுடன் அறநெறிப் பாடசாலைகள் மூலம் பாடப்புத்தகங்கள் மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுதல் வகுப்பு பரீட்சை நடாத்தியதன் பின்னராக இருந்தமையும் 2024 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தின் போது நடைபெற்ற பொதுத் தேர்தலின் காரணமாக மாவட்ட செயலகத்தில் இருந்து லொறி வண்டியை பெற்றுக் கொள்வதற்கு வசதியீனமும் ஏற்பட்டிருந்ததுடன் உத்தியோகததர்களை அந்த கடமைகளில் ஈடுபடுத்தல் மற்றும் திட்டமிடப்பட்ட பிரகாரம் பாடப் புத்தகங்களைப் கொண்டு செல்லும் நடவடிக்கைகள் சில மாவட்டங்களில் மேற்கொள்ள முடியாமையின் காரணமாக போக்குவரத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்ட பிரகாரம் உரிய பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2017 யூன் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்கான சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மற்றும் விற்றுத் தீர்த்தல் தொடர்பான தகவல்கள் கொம்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.	உரிய அறிக்கை எதிர்காலத்தின் போது குறித்துரைத்த திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு தெரிவிக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்களின் தகவல்கள் கொன்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4.4 இழப்பு மற்றும் நட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
திணைக்களத்தின் வாகனம் ஒன்றுக்கு ஏற்பட்ட விபத்துக்குரிய ரூபா 130,154 ஆன நட்டத்தில் ரூபா 85,554 மாத்திரம் காப்புறுதி இழப்பீடாக கிடைத்திருத்ததுடன் நிதிப்பிரமாணம் 104(4) பரிசோதனை அறிக்கையின் மூலம் மிகுதித் தொகையான ரூபா 44,620 இழப்பு நட்டமாக பதிவளிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான அறிக்கை விநியோகிகப்படுகின்ற திகதி வரையில் நிதிப்பிரமாணம் 108 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை.	நிதிப்பிரமாணம் 108 மற்றும் 109 இன் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மரணடைந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 152,680 கூட்டுத்தொகையான கடன் மீதி தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4:4, 4:5	இந்த கடன் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4:4, 4:5 மற்றும் 4:6 பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	மற்றும் 4:6 பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன் 03 வருடங்களை விஞ்சியிருந்த ரூபா 121,430 கூட்டுத்தொகையான கடன் மீதியும் அதில் உள்ளடங்கி இருந்தது.		
(ஆ)	2018 சனவரி 24 ஆந் திகதிய இலக்கம் 02/2018 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 6.5 ஆம பந்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல், இயலளவு அபிவிருத்தித் திட்டத்தின் அபிவிருத்தி, திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துதல் தொடர்பான பொறுப்புக்கள் கையளித்து சிரேஸ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்க வில்லை.	உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் பொருத்தமான சிரேஸ்ட உத்தியோகத்தரைப் பெயரிட்டு அவருக்குரிய பொறுப்புக்களைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மகாநாயக்க சாரிக்காராம கட்டிடம் திணைக்களத்தால் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய காணியின் உரித்து இந்த அறிக்கைத் திகதி வரையிலும் இந்த திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.	மகாநாயக்க சாரிக்காராம இற்கு உரிய காணியின் உரித்து திணைக்களத்திற்கு கையேற்பதற்கு உரிய நிறுவனத்திற்கு அறிவித்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	விரைவாக உரிய காணியின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	களணி ஈரியவெட்டியே இல் தச சில் மாதா தலைமையகம் நிர்மாணிக்கப்பட்ட காணி 2012 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு சங்கைக்குரிய வெலமிட்டியாவே குசலதம்ம நாயக்க தேரர் அவர்களின் விருப்பம் பிரதேச செயலாளருக்கு தெரிவித்திருக்கும் போது 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இது வரை காணியைக் கைப்பற்றும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்து சட்ட ரீதியான உரித்து பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	களணி ஈரியவெட்டிய தசசில் மாதா நிறுவனத்திற்குரிய காணியின் உரித்து திணைக்களத்திற்கு கையேற்பதற்குரிய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	விரைவாக உரிய காணியின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ)	திணைக்களத்தால் 1931 இன் 19 ஆம் இலக்க பௌத்த விகாரை தேவாலய கட்டளைச் சட்டத்தில் உள்ள பின்வரும் ஒழுங்குவிதிகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.		
(i)	1931 இன் 19 ஆம் இலக்க பௌத்த விகாரைகள் தேவாலய கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தினால் நாட்டில் காணப்படுகின்ற சகல மத ஸ்தானங்களின் எண்ணிக்கை மற்றும் சட்டத்தின் ஏற்பாடுகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள மத ஸ்தாபனங்கள் எத்தனை என்பது தொடர்பாக இனங்காணப்படாது இருந்ததுடன் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுகின்ற மற்றும் விடுவிக்கப்படுகின்ற மத ஸ்தானங்களை இனங்காண்பதற்கான குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	1931 இன் 19 ஆம் இலக்க பௌத்த விகாரைகள் தேவாலய கட்டளைச் சட்டத்தின் 4(1) கீழ் விடுவிக்கப்பட்ட மத ஸ்தாபனங்கள் 254 ஆக இருந்ததுடன் ஏனைய சகல மத ஸ்தாபனங்களையும் விடுவிப்பதாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த 254 மத ஸ்தாபனங்களுக்கு உரிய வர்த்தமானியின் மூலம் 105 ஸ்தாபனங்கள் இது வரையில் அலுவலகத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்டதுடன் மீதியானவற்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.	கட்டளைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	சட்டத்தின் 36(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டின் யூன் 30 ஆந் திகதி மற்றும் திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைகின்ற அந்த அந்த ஆறு மாதங்கள் தொடர்பாக தயாரிக்கப்படுகின்ற கணக்குக் குறிப்புக்கள் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தால் பரீட்சிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட வேண்டிய 216 ஆன விகாரைகளின் முதலாவது அரை ஆண்டு கணக்கு அறிக்கைகள் 51 மற்றும் இரண்டாவது அரையாண்டு அறிக்கைகள் 59 பெறப்படாது இருந்ததுடன் தேவாலயங்களுக்கு உரியதாக பெறப்பட வேண்டிய 38 ஆன இரண்டாம் அரை ஆண்டு அறிக்கை 01 பெறப்பட்டிருக்க வில்லை.	2024 ஆண்டுக்குரிய ஒரு தேவாலயத்திற்கு உரிய அரை ஆண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படாது இருந்ததுடன் அந்த அறிக்கை தாமதம் இன்றி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விகாரைகளில் அநேகமான விகாரதிபதிகள் தேரர்கள் அல்லது அதன் ஏனைய தேரர்கள் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளமையால் அரை ஆண்டு அறிக்கை பெற்றுக் கொள்வதில் நலிவான நிலைமை காணப்பட்டது. இது தொடர்பாக மத ஸ்தாபனங்களுக்கு பஸ்நாயக்க நிலமை அல்லது பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில்	கட்டளைச் சட்டத்தின் நியதிகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		வழங்கப்படுகின்ற கடமைப் பட்டியலின் மூலம் சட்டத்தின் ஏற்பாடுகள் மேவுகை செய்யப்படுகின்றாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	
(iii)	தமது கட்டுப்பாட்டுக்கு கீழ் உள்ள 254 மத ஸ்தாபனங்கள் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்பட்டதுடன் இந்த 254 மத ஸ்தாபனங்களுக்கு இடையே 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது முறையே 16 மத ஸ்தாபனங்கள் மற்றும் 06 மாத்திரம் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வுக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. அதில் காண்பிக்கப்பட்டுள்ள மத ஸ்தாபனங்களின் எண்ணிக்கை 6 சதவீதம் மற்றும் 2 சதவீத அளவு மாத்திரம இருந்த காரணமாக சட்டத்தின் 38(1) பிரிவின் கீழ் பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு முடியாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.	சொரகுணே கதிர்காம தேவாலயத்தில் கணக்காய்வு அறிக்கை விநியோகிக்கப்பட்டதுடன் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு எதிராக முறைப்பாடு சமர்ப்பித்ததன் காரணமாக 2023 ஆம் ஆண்டின் போது கணக்காய்வு உதவி உத்தியோகத்தர் இடமாற்றலாகிச் சென்றதுடன் 2024 யூலை மாதம் முதல் திசெம்பர் வரை பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டமையால் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இரத்னபுரி சமன் தேவாலயம் மற்றும் சங்கப்பால ரஜமகா விகாரையின் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாது இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2024 யூலை மாதத்தின் போது பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி உயர்வு பெற்று இடமாற்றலாகிச் சென்றதுடன் அவருக்குப் பதிலாக இன்னுமொரு உத்தியோகத்தர் 2025 சனவரி 01 ஆந் திகதி முதல் வருகை தந்ததுடன் கடந்த காலத்தின் போது அவர் கடற்படையில் வேலையாற்றியிருந்தார். இவ்வாறான காரணங்களினால் மத ஸ்தானங்களின் கணக்காய்வு நடவடிக்கைகள் குறைவடைந்து இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.	கட்டளைச் சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் நியதிகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iv)	சட்டத்தின் 38(2) ஆம் பிரிவின் பிரகாரம் பரீட்சிப்பை மேற்கொண்ட உத்தியோகத்தர் அந்த பரீட்சிப்பின் இறுதியின் போது அறிக்கை ஒன்று பௌத்த அலுவல்கள் ஆணையாளருக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் சட்டத்தில் அந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டதா என பரீட்சிப்பதற்கு உரிய கணக்காய்வு அறிக்கை மற்றும் இந்த அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் சட்டத்தின் 38(1) மற்றும் 38(2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் மத ஸ்தாபனங்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் சகல எண்ணிக்கையினையும் பரீசிப்பதற்காக முறையான திட்ட முறைமை ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டிருக்கவில்லை.	1931 இல் 19 ஆம் இலக்க விகாரைகள் தேவாலய சட்டத்தின் ஏற்பாடுகளில் இது தொடர்பாக காணப்படாது இருந்தமையால் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாது இருந்ததாகவும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட மத ஸ்தானங்களின் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் விகாரைகள் தேவாலய கட்டளைச் சட்டத்தின் 4(1) பிரிவின் பிரகாரம் 254 மத ஸ்தாபனங்கள் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு நியமிக்கப்பட்டு சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளக்கூடிய ஆகக் கூடிய இயலளவில் கணக்காய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.	கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(v)	பௌத்த அலுவல்கள் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கங்களில் காண்பிக்கப்பட்ட பணிகள் மற்றும் 1931 இன் 19 ஆம் இலக்க பௌத்த விகாரை தேவாலய கட்டளைச் சட்டத்தில் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் ஆன பௌத்த மத ஸ்தாபனங்கள் மத ஸ்தாபனங்கள் மற்றும் ஆதனங்கள் சம்புத்த சாசனத்தின் நோக்கங்களுக்காகவும் ஈடுபடுத்துவதற்கு தேவையான நிர்வாக உதவிகளை வழங்குதல் மற்றும் சாசன ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் போன்ற இலக்குகளை	4(1) பிரிவின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற மத ஸ்தலாபனங்களின் ஆதனங்களை நிர்வகிப்பதற்காக போதியளவான நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டு எதிர்வுகூறப்பட்ட பாதீடு மற்றும் அரை ஆண்டு அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் விகாரைகளில் இருந்து அவற்றை சமர்ப்பித்தல் வசதியீனமாகக் காணப்படுகின்றமையால் அந்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பிரதேச அலுவலகங்களுக்கு	கட்ளைச் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	நிறைவேற்றுவதற்காக போதியளவான நிர்வாகத் திட்ட முறைமை ஒன்றை பின்பற்றுவதற்கு பௌத்த அலுவல்கள் ஆணையாளர் ஈடுபடுத்தியுள்ள கவனம் போதியளவில் காணப்பட வில்லை.	அறிவித்து அந்த நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யப்பட்டுள்ளது. விகாரை தேவாலய கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் எதிர்வுகூறப்பட்ட பாதீடு மற்றும் அரை ஆண்டு அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு உரிய 254 மத ஸ்தாபனங்கள் இருந்ததுடன் அதனிடையே தேவாலயங்களுக்காக விசேட கவனம் செலுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக ஏனைய சகல மத ஸ்தாபனங்களினதும் நிர்வாக நடவடிக்கைகள் காணப்படுவதுடன் அந்த அளவினை நாளாந்தம் பார்க்கும் போது மிகவும் கணிசமான அளவு ஒன்றாக இருந்ததாகவும் பதவியணியினர் வெற்றிடம் காணப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	
(ஊ)	திணைக்கத்திற்காக சேவர் (server) வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக திணைக்களத் தலைவர் முகாமைத்துவ தரவு முறைமை 2023 ஆம் ஆண்டு முதல் செயலிழந்து காணப்படுவதுடன் திணைக்களத்தில் உத்தியோகபூர்வ இணையதளமும் நாளது வரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்திற்குரிய சகல பணிகளையும் நிறைவேற்றும் போது மென்பொருளின் மூலம் மேற்கொள்வதற்கு உரிய System தற்போது தயாரிக்கப்படுவதுடன் அதற்காகத் தேவையான Tanent வசதியும் LGC இல் இருந்து கோரப்பட்டுள்ளதாகவும் இணையதளத்தை உள்ளடக்கிய தரவு முறைமை யாவும் 2025 ஆம் ஆண்டின் இறுதியில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	திணைக்களத்திற்காக சேவர் (server) வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தை நாளது வரையாக பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5. நல்லாளுகை

5.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 08 ஆவது மற்றும் 10 ஆவது பிரிவுகளின் பிரகாரம் வருடத்திற்கு இரு தடவை அல்லது வருடத்திற்கு ஒரு தடவை இலங்கைத் தகவலறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டிற்காக உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	உரிய அறிக்கை தயாரிப்பதற்கு கணிசமான தகவல்கள் சேகரிக்க வேண்டியிருந்தமையால் சமர்ப்பிக்க தாமதம் ஏற்பட்டு இருந்ததுடன் கூடிய விரைவில் அதனை சமர்ப்பித்து அதன் பிரதி ஒன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	சட்டத்தின் பிரகாரம் உரிய அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.